# ஜனவரி 27 ஆம் தேதி துவங்கி, திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்களில் முகக் கவசம் அணிவது கட்டாயமாகும்

ப்ராம்ப்ட்டன், ON (ஜனவரி 27, 2021) – ஜனவரி 27 ஆம் தேதியாகிய இன்று முதல், திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்களில் முக்க் கவசம் அணிவது கட்டாயம் என்று ப்ராம்ப்ட்டன் நகர் மன்றக் கூட்டத்தில் இன்று ஜனவரி 27 ஆம் நாளில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நகரின் அனைத்து எட்டு திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்களிலும், பத்து வயதுக்கும் மேற்பட்ட அனைத்து பங்கேற்பாளர்களும் பனிக்கட்டித்தரை மீது இருக்கும்போது, மருத்துவம் அல்லாத முகக் கவசம் அல்லது முகத்திரைகளை அணிவது கட்டாயமாகும்.

இந்த திறந்தவெளி பனிச்சறுக்கு வளையங்களின் உட்புற வளாகத்தின் மற்ற எந்தப்பகுதியிலும் இருக்கும் அனைத்து வயது பங்கேற்பாளர்களும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அல்லது முகத்திரைகளை அணிவது அவசியமாகும். இதன்படி, வரிசையில் காத்திருக்கும் மக்கள், கழிப்பறைகளை உபயோகிக்கும் மக்கள் மற்றும் பார்வையாளர் கூண்டுகள் மற்றும் அனைத்து பொது இடங்களில் இருக்கும் மக்களும் அடங்குவர்.

குறிப்பாக கோவிட்-19 தொற்று பரவல் காலத்தில் சமுதாய சுகாதாரம் மற்றும் பாதுகாப்பே முன்னுரிமை கொண்ட விஷயமாகும். பனிச்சறுக்கு வளையங்கள் அமைந்திருக்கும் இடங்கள், மக்கள் அங்கு கூட முடியுமா என்பது பற்றிய நிலைமை, மற்றும் பிற தகவல்களுக்கு வருகை தரவும்: www.brampton.ca/outdoorskating.

**முன்பதிவு செய்தல்**

ஜனவரி 24, ஞாயிற்றுக்கிழமை துவங்கி, தாங்கள் பங்கேற்கத் தேர்வு செய்யவிருக்கும் நேரத்திற்கு 24 மணி நேரம் முன்னதாகவே, தங்களுக்கான இடத்தை பதிவு செய்து கொள்ளலாம். முன்பதிவு செய்வதற்கு வருகை தரவும்: www.brampton.ca/outdoorskating அல்லது 905.791.2240 என்ற எண்ணை அழைக்கவும்.

மிக அதிக தேவை இருப்பதினாலும் மற்றும் குறைவான கொள்திறன் காரணமாகவும், நாளொன்றுக்கு ஒரே ஒரு திறந்தவெளி பனிச்சறுக்கு செய்யவே குடியிருப்புவாசிகள் அனுமதிக்கப்படுவார்கள். ஒட்டுமொத்த சமுதாயத்தில் இருப்பவர்களும் திறந்தவெளி பனிச்சறுக்கு செய்வதற்கான அணுகல் பெறுவதை உறுதிவதற்காகவே இப்படிச் செய்யப்படுகிறது.

**ரத்து செய்தல்**

உங்களுக்குத் தேவையிருக்காத எந்த முன்பதிவையும் தயவு செய்து ரத்து செய்யவும்; இதனால் பிற குடியிருப்புவாசிகள் தங்களுக்கான நேரத்தை முன்பதிவு செய்துகொள்ள வாய்ப்பு கிடைக்கும். நீங்கள் செய்த முன்பதிவினை ரத்து செய்ய அழைக்கவும்: 905.791.2240 அல்லது இந்த மின்னஞ்சலுக்கு எழுதவும்: recconnects@brampton.ca.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca